**மாகாண வீதிச் செயற்திட்டம் - ஊவா மாகாணம் - 2015**

மாகாண வீதிச் செயற்திட்டம் - ஊவா மாகாணத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 11 ஆந் திகதிய 4630 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.09 (பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

மாகாண வீதிச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைகள் அமுலாக்கல் முகவர்களாக உள்ளதுடன் முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சும் தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. மேம்படுத்தப்பட்ட வீதி உட்கட்டமைப்புக்களின் நிலையான முகாமைத்துவம் ஊடாக ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலுள்ள சமூக பொருளாதார நிலையங்களுக்கான நுழைவுகளை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் - ஊவா மாகாணம் ரூபா 7,592 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 67.2 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 6,800 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2010 மார்ச் 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 மார்ச் 31 இல் பூர்த்தி செய்திருந்தது. எனினும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது.

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது
அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

செயற்திட்டத்தின் 08 அலுவலர்களிடமிருந்து ரூபா 251,216 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரிகள் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 60.00 | 6,800 | 1,109 | 2.62 | 348.93 | 54.34 | 6,762.25 |
| இலங்கை அரசாங்கம் | 7.20 | 792 | 203 | - | 121.33 | - | 827.28 |
| | 67.20 | 7,592 | 1,312 | 2.62 | 470.26 | 54.34 | 7,589.53 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 60 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ஐ.அ.டொலர் 54.34 மில்லியனை பிரதிநிதித்துவப்படுத்தும் 90.6 சதவீதம் மாத்திரமே செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைத்திட்டத்தின் பிரகாரம், ஊவா மாகாணத்திலுள்ள 06 மாகாண வீதிகளின் 150 கிலோமீற்றர்களை புனரமைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் புனரமைப்பு வேலைகளின் நோக்கெல்லை பின்னர் 121.77 கிலோமீற்றர்கள் வரை குறைக்கப்பட்டிருந்தது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 94 பொதிகளின் கீழ் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட அனைத்து வீதி புனரமைப்பு வேலைகளும் வீதிப்

பராமரிப்பு ஒப்பந்தங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட 04 மாகாண வீதிகளிலுள்ள 54 பஸ் தரிப்பிடங்களை நிறுவுவதற்கு 2014 ஆம் ஆண்டில் ரூபா 10.36 மில்லியன் மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தகைய வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டுமிருந்தன.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தள விஜயங்களின் போது வீதிப் புனரமைப்பு நோக்கங்களிற்கான முறையற்ற நடைமுறைகளின் பிரயோகம் காரணமாக செயற்திட்டத்தால் புனரமைக்கப்பட்ட 06 மாகாண வீதிகளில் களவுடா – கண்டகிற்றியா – கரமெற்றியா வீதி மற்றும் ஹக்கல மக்டொனால்ட் வீதிகளின் பல இடங்களில் வீதி மேற்பரப்புக்கள் மற்றும் வடிகாலமைப்பு முறைமைகளில் குறைபாடுகள் வெளிப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது ஒவ்வொன்றும் ரூபா 257,250 கிரயத்தில் 04 மாகாண வீதிகளில் 54 பஸ் தரிப்பிடங்களை நிர்மாணிப்பதற்கு 2014 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுத்திருந்தது. 2016 மார்ச் 21 இல் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தள விஜயங்களின் போது குறித்துரைக்கப்பட்டவைகளிலிருந்து நிர்மாணிப்புக்கள் விலகியிருந்தமை மற்றும் 22 பஸ் தரிப்பிடங்களின் தள மேற்பரப்புக்களில் வெடிப்புக்கள் போன்ற குறைபாடுகள் வெளிப்பட்டிருந்தது.

## 3.4 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டு தீர்க்கப்படாதிருக்கின்ற விடயங்கள்

ஆலோசனையாளருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், ஆலோசனையாளரின் பதவியணியினருக்காக செயற்திட்டத்தால் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டியதுடன் அதற்காக 15 மோட்டார் வாகனங்களை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் செயற்திட்டத்தால் 25 மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 50.5 மில்லியன் மேலதிகக் கிரயம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவற்றிற்கு பொறுப்பான தரப்பினரை அடையாளம் காண்பதற்கும் காரணங்களை புலனாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

களவுடா – கண்டகிற்றியா – கரமெற்றியா வீதியின் புனரமைப்பு வேலைகள் பொறியியலாளரின் மதிப்பீட்டை விட 32 சதவீதம் குறைவாக ரூபா 767.33 மில்லியன் கிரயத்தில் வீதிப் புனரமைப்பு வேலைகளின் சாத்தியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கேள்விதாரரிடமிருந்து மேலதிக தகவல்களை கோராமல் வெளிநாட்டுக் கூட்டுமுயற்சி ஒப்பந்தகாரரொருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. கூட்டுமுயற்சி ஒப்பந்தமானது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுமிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. எனினும் விலை வேறுபாடுகள் மற்றும் ஒப்பந்தகாரரால் வேண்டப்பட்ட 736 நாட்களுக்கான கால நீடிப்பு தொடர்பாக செயற்திட்டத்துடன் எழுந்த சர்ச்சைகளை தீர்ப்பதற்கு ஒப்பந்தகாரர் நடுவர் பிணக்குத் தீர்த்தல் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்ததுடன் ரூபா 729 மில்லியன்

தொகையொன்றை கோரியிருந்தார். கோரிய மொத்தத் தொகையில் ரூபா 32.80 மில்லியன் தொகை 2013 திசெம்பரில் செயற்திட்டத்தால் தீர்வு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2015 ஆகஸ்ட் 06 இல் வழங்கப்பட்ட நீதிமன்றத்தின் நடுவர் தீர்மானங்களின் பிரகாரம் ஒப்பந்தகாரரால் பிணக்குத் தீர்த்தல் சபைக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருக்கு ரூபா 471.61 மில்லியன் வேறு தொகையை செலுத்துவதற்கு செயற்திட்டத்திற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்ட ரீதியான கருத்தினை பெறுவதற்கும் வணிக உயர் நீதிமன்றத்தின் வழக்கை ஆலோசிப்பதற்கான சந்தர்ப்பங்களை தேடிச்செல்லவும் நடவடிக்கை எடுத்திருந்தது.

## 3.6 செயற்திட்டத்துடன் நெருங்கிய செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் சாத்தியவளக் கற்கைகளின் பிரகாரம், ஊவா மாகாணத்திற்குள் சமூக போக்குவரத்து அமைப்பின் மட்டத்தை உயர்த்த இயலுவதற்கு செயற்திட்டத்தின் கீழான வீதிப்புனரமைப்புக்களிற்கான பிரயாண நேரங்களை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் வீதிப் புனரமைப்பின் முன்னரும் பின்னரும் பிரயாண நேரங்களை மதிப்பிடுவதற்கும் மாகாண சபையின் ஆதிக்க எல்லையின் கீழ் பஸ் சேவை அமைப்புக்களின் நேர அட்டவணைகளை மீளாய்வு செய்வதற்கும் ஊவா மாகாண சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முடிவடைந்திருந்த போதிலும் உரிய தரப்பினர்களுக்கு சொத்துக்களை கையளிப்பதற்கு செயற்திட்டத்தாலும் நிறைவேற்று முகவராலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகள் முடிவுறுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தது.